## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(10.08.2024 முதல் 14.08.2024)

அறிக்கைஎண்: 38/2024 தேதி : 09.08.2024

### கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (10.08.2024 முதல் 14.08.2024).

| கடந்த வார வானிலை (06.08.2024 முதல் 08.08.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (10.08.2024 முதல் 14.08.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 06/08 | நாள்-2 07/08 | நாள்-3 08/08 | தேதி | நாள்-1 10/08 | நாள்-2 11/08 | நாள்-3 12/08 | நாள்-4 13/08 | நாள்-5 14/08 |
| 2.5 | 31.7 | 7.2 | மழை (மி.மீ.) | 0 | 6 | 6 | 48 | 5 |
| 35 | 37 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 35 | 34 | 33 |
| 25 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 24 | 23 | 22 |
| 6 | 7 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 6 |
| 80-60 | 81-54 | 78-64 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 70-40 | 70-40 | 80-50 | 80-40 |
| 17 | 12 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 18 | 14 | 12 | 10 | 8 |
| வட வட மேற்கு | மேற்கு வட மேற்கு | கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | மேற்கு வட மேற்கு | தென் மேற்கு |

### கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 11.08.2024 முதல் 14.08.2024 ஆகிய தினங்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 - 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 – 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 8 – 18 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |

| | | |
|---|---|---|
| | | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும் |
| பருத்தி | அறுவடை | மழையினால் முதிர்ந்த பருத்திக்கு ஏற்ப்படும் சேதத்தை தவிர்க்க மழைக்கு முன்னதாக முதிர்ந்த பருத்திகளை அறுவடை செய்து மழை நீர் படாமல் பாதுகாக்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கரும்பு | | காற்று மற்றும் மழையால் கரும்பு பயிர் சாயாமல் இருக்க விட்டம் கட்டி மண் அணைக்கவும் |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**